அப்புத்தளை நகரசபை
பதுளை மாவட்டம்

----------------------------------

1. நிதிக்கூற்று

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்.

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்று 2019 பெப்ரவரி 25 ஆம் திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு ஆதிபதியின் அறிக்கை 2019 மே 24 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 நிலைகள் தொடர்பில் கணக்கிடு செய்யப்பட்ட அபிப்ராயம்

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அப்புத்தளை நகரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆணிடிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றது என்பதே எனது அபிப்ராயமாகும்.

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கிட்டு ரிதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (ை) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் செலவு மற்றும் கொள்வனவுகளுக்காக ரூ.212,751 தொகை கணக்கிடப்படவில்லை. | கணக்கீடு சரிசெய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ைை) | நடப்பாண்டில் கொள்வனவு செய்த ரூ.185,280 பெறுமதியான காகிதப்பொருட்களுக்காக செலுத்த வேண்டிய தொகை ஒன்றிணைந்த நிதியத்திற்கு கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கீடு சரிசெய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ைைை) | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் ரூ.717,150 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களினதும் உபகரணங்களினதும் பெறுமதி ரூ.951,150 ஆக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கீடு சரிசெய்யப்பட வேண்டும். | வருங்காலத்தில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். . |

(அ) கணக்காய்விற்கு எழுத்துமூல ஆதாரங்கள் காணப்படாமை

| கணக்கர்யவு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ.63,661,805 பெறுமதியான ஆதன விடயங்கள் 02 உரிமையை உறுதிசெய்யும் ஆவணங்கள் மதிப்பீட்டு அறிக்கை உப அட்டவணை மற்றும் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வில் திருப்திகரமான வெளிப்பாடு காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டும் கூற்றுக்களினக் மிகுதிகளை உறுதிசெய்யும் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை சரியான முறையில் பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை அதை சரி செய்ய விடயபொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது |

1.4 ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவ திர்மானங்களுக்கும் அமைவாக இல்லாமை

| சட்ட திட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் முகாமைத்துவத்தின் தீர்மானங்களுக்குமான சமர்ப்பிப்பு | அமைவாக இல்லாமை | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- | --- |
| (அ) நகரசபை கட்டளைச்சட்டம் | | | |
| (ஸ)170 (அ) பிரிவு | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.19,672,549 நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நகரசபை கட்டளைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்கையெடுக்க வேண்டும். | 2019 வருடத்தில் அந்நிலுவை தொகையை அறவிட்டுக்கொள்வதற்காக பல்வேறு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. . |
| (ஜை)180 பிரிவு | 2015,2016, 2017 மற்றும் 2018 இற்காக பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக்காகவும் நிர்வாகம் தொடர்பாக அறிக்கையை சபைக்கு மற்றும் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | நகரசபை கட்டளைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய நடவடிக்கையெடுக்க வேண்டும். | 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் உத்தியோகத்தர் நிர்வாகம் காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் நிர்வாகம் தொடர்பான விரிவான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் 2019 ஆம் ஆண்டு இறுதியில் அந்த அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை ஜனநாயச சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| நிதி ஒழுங்குவிதிகள் 371 | சபை 12 தடவைகளில் வழங்கிய ரூ.140,480 தொகைக்கான உபஒப்பந்தம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஓப்பந்தம் பூரணப்படுத்தப்பட நடவடிக்கையெடுக்கப்படும். | 21 ஆண்டுகள் தொடக்கத்திலிருந்து அந்த மிகுதி தொடர்ந்து வருவதுடன் இது தொடர்பாக பூரண தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | பூரணப்படுத்தப்படாமையால், முற்பணத்தை செலுத்தாமையால், அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்கொண்டு ஆராய்வதற்கு விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரது 1988 ஆம் ஆண்டு மே 17 திகதி கொண்ட 1988/22 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை. | 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டிய சோலைவரி அறவீடு செய்யும் ஆதனங்கள் 2007 ஆண்டிற்கு பின்னர் மதிப்பீடு செய்யாமல் சோலைவரி அறவிடப்படுகின்றது.. | | பிரதான மதிப்பீட்டு உத்தியோகத்தரிடம் ஒவ்வொரு தடவையும் இது தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பினும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதுடன், இந்த வருடத்திலாவது இந்த ஆதனத்தை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

2. <u>நிதி மிளாய்வு</u>

2.1 <u>நிதி பெறுபேறு</u>

முன்வைக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கமைய மிளாய்வுசெய்யப்பட்ட 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்காக சபையின் மிண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.15,665,338 ஆவதுடன் அதையொத்து பார்க்கையில் கடந்த வருடத்தில் மிண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.8,135,459 ஆக காணப்பட்டது.

2.2 <u>வருமான நிர்வாகம்</u>

2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>

மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக மற்றும் கடந்த வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமான திரட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழ்வருமாறு

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டீசம்பர் 31 இற்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | புட்டியலிடப்பட்ட வருமானம் | திரட்டிய வருமானம் | டீசம்பர் 31 திகதிக்கு நிலுவை வருமானம் |
| | | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. | ரு. |
| (ை) | சோலைவரி | 1,845,351 | 1,845,351 | 1,565,961 | 279,391 | 1,843,076 | 1,843,076 | 1,644,528 | 429,308 |
| (ைை) | வுாடகை | 16,444,277 | 16,444,277 | 10,529,520 | 5,914,757 | 10,569,732 | 10,569,732 | 7,962,686 | 2,607,046 |
| (ைைை) | அனுமதிப்பத்திர கட்டணம் | 325,000 | 325,000 | 737,002 | - | 805,000 | 805,000 | 586,937 | 218,063 |
| (ை) | ஏனைய வருமானம் | 1,057,921 | 1,057,921 | 565,185 | 492,736 | 1,539,635 | 1,539,635 | 873,440 | 666,195 |
| | மொத்தம் | 19இ672இ549 | 19இ672இ549 | 13இ397இ668 | 6இ686இ884 | 14இ757இ443 | 14இ757இ443 | 11,067,591 | 3இ920இ612 |

## 2.2.2 வருவாய் சேகரிப்பு தொடர்பான செயலாக்கம

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மிளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் பட்டியலிடப்பட்ட ரூ.19,672,549 ஆன மொத்த வருவாயில் வருடம் முடிவெய்துகையில் ரூ.6,686,884 அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தின் நூற்றுக்கு 34 | நிலுவை வருமானத்தை அறவிடல் வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டத்தையும் செயற்பாடும் திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 05 வருடங்களுக்கு கூடுதலாக நிலுவையாக உள்ள தண்ணிர் கட்டணம் தராசு வாடகை வாடி இல்ல கட்டணம் ரூ.4,967,666 தொகை அறவிட முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தண்ணிர் கட்டணம் 2007 வருடத்திலிருந்து தொடர்ந்து நிலவும் மிகுதியாக இருப்பதுடன் இது தொடர்பில் நிர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் வினாவியிருப்பினும் பதில் கிடைக்கவில்லை. நிலுவை தராசு கட்டணம்அறவிடுவதற்காக குறித்த நபரை அறிவுறுத்தியிருப்பினும் இதுவரை பணம் கிடைக்கவில்லை. நிலுவை வாடி இல்ல கட்டணம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபையை அறிவுறுத்தியிருப்பதுடன், இது தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல் நிதிமன்றத்தில் வழக்கொன்றும் விசாரிக்கப்பட்டு வருகின்றது. |

2.2.3 சோலைவரியும் வாடகை வருமானமும்.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் பட்டியலிடப்பட்ட ரூ.1,845,351 தொகையான சோலைவரி வருமானத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.279,391 திரட்டப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை சோலைவரி அறவிடப்பட வேண்டும். | இதுவரையில் ரூ..30,458 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவைத்தொகையை விரைவாக அறவிட நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் பட்டியலிடப்பட்ட ரூ.16,444,277 தொகையான வாடகை வருமானத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ.5,914,757 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | இதுவரையில் ரூ.1,133,213 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், ரூ.2,870,576 தொகை நாள்தோறும் சந்தையில் நிலவும் நிலுவை தொகை என்றும் வர்த்தக ரீதியிலான வருமானம் தொடர்பாக தோன்றியுள்ள பிரச்சினை அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்படாது புறக்கணிப்பட்டு வருகின்றது. |

2.2.4 நிதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக்கட்டணமும்
(அ) நிதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| (அ) நிதிமன்ற தண்டப்பணம் | | |
| மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை நிதிமன்ற தண்டப்பணம் ரூ.282,910 ஆக இருந்தது. | நிலுவை நிதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | புணம் கிடைக்காத மாதங்களுக்கான உபஅட்டவணைகளை தயாரித்து அனுப்பியுள்ளதுடன் அப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பேன். |
| ( ஆ) முத்திரைக்கட்டணம் | | |
| மிளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.1,209,641 ஆக இருந்தது. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஜனவரி மாதத்தில் ரூ.684,476 தொகை கிடைத்துள்ளதுடன், மிகுதி பணத்தை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுப்பேன். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாக்கம்

நகரசபை கட்டளைச்சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கிழ் பொதுமக்கள் சுகாதாரம் பொதுபயனபாட்டு சேவைகள் மற்றும் பொதுப்பாதைகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் மக்களது வசதிமிகு பயன்பாடு வசதி மற்றும் நலன்புரிசேவை ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கருமங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| நகரசபை கட்டளைச்சட்டத்தின் 157 பிரிவின் பிரகாரம் பிரதான விடயங்கள் 25 ஐ நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அதில் 24 விடயங்களுக்காக உபவிதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் ஆக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் ஆக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்பட்ட உபவிதிகள் மாகாணசபைக்கு சமர்ப்பித்து சட்டமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மேற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுகொள்ளும் குறிக்காட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவிடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | வருங்காலத்தில் நிலைபேறுடைய அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்குக்கமைய செயலாற்ற எதிர்ப்பார்க்கின்றேன். |

3.2 முகாமைத்துவம் சார் விணைத்திறன் அற்றதன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ஓராண்டுக்கும் மேலாக நிலவும் வருமான கடன்பட்டோர் தொகை ரூ.16,057,332 மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கையெடுக்கப்பட வேண்டும். | கடன்பட்டோரிடமிருந்து 2019 ஏப்பிரல் 30 ஆம் திகதியாகும் போது ரூ.350,435 தொகை அடைக்கப்பட்டுள்ளது. |

3.3 <u>இனங்காணப்பட்ட நட்டங்கள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| நாட்சந்தை இல.05 கொண்ட மாட்டிறைச்சி கடையின் கேள்விதாரர் ஒப்பந்தத்தை மிறியமையின் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. கேள்விதாரர் செலுத்தியிருந்த வைப்புத்தொகையிலும் சபை நிதியத்துக்கு வைப்புச்செய்ய வேண்டிய ரூ.648,340 தொகை திரும்பவும் கேள்விதாரருக்கு செலுத்துவது நிதி நட்டமேற்பட்டுள்ளது. | சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த கொள்வனவை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் பின்பற்றியுள்ளதுடன், நகரசபைக்கு நிர்வகிக்க முடியாத நிலைமையின் அடிப்படையில் கடந்த ஆண்டுக்காக நிதி உருவாக்கத்தை செய்ய முடியாது போய்விட்டது. |

3.4 <u>கொள்வனவு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | விதந்துரைப்பு | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ---------------------- | ------------- | --------------- |
| மிளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கொள்வனவு திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.. | கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 வருடத்திற்காக கொள்வனவு திட்டம் தயாரிக்க நடவடிக்கையெடுப்பேன். |

4. கணக்கீடுகள் தொடர்பான செயற்பாடு மற்றும் நல்லாட்சி

4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| --------------------------------------- | ------------------ | ---------------------------- |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக உள்ளக கணக்காய்வு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும்.. | 2018 டிசம்பர் 05 ஆம் திகதி உள்ளக கணக்காய்வு மேற்களொள்ளப்பட்டதுடன், அதன் அறிக்கை 2019 ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
| --- | --- | --- |
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 ஆண்டின் ஜுன் மாதம் 09 திகதி மற்றும் இல. டிஎம்.ஏ ∴2009(01) கொண்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கைக்கமைவாக காலாண்டுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டங்கள் 02 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டியானது உள்ளூராட்சி திணைக்களத்தால் நடாத்தப்பட வேண்டும். |